## ஆளுநர் உரை வெற்று அறிக்கை! இந்த அரசு முழுமையாக தோல்வியடைந்துவிட்டது!

# மாற்றத்தை எதிர்பார்த்த மக்களுக்கு இன்றைக்கு ஏமாற்றம்தான்!

## சட்டப் பேரவையில் ஆளுநர் உரை மீதான விவாதத்தில் எஸ்.ஆஸ்டின் பேச்சு!

**சென்னை, ஜூன். 21-**

**சட்டப் பேரவையில் ஆளுநர் உரை மீதான விவாதத்தில் நாகர்கோவில் தொகுதி உறுப்பினர் எஸ்.ஆஸ்டின் பேசுகையில் மாற்றத்தை எதிர்பார்த்த மக்களுக்கு இன்றைக்கு ஏமாற்றம்தான் கிடைத்திருக்கிறது என்று குறிப்பிட்டார்.**

இதுகுறித்து எஸ்.ஆஸ்டின் பேசியதாவது:-

நடைபெற்று முடிந்த சட்டமன்றத் தேர்தலிலே நாகர்கோவில் தொகுதியிலே போட்டியிடுவதற்கு எனக்கு வாய்ப்பளித்து, வெற்றிபெறச் செய்து, இந்த அவையிலே பேசுவதற்கு வாய்ப்பளித்திருக்கக்கூடிய, கடந்த ஐந்தாண்டு கால திராவிட மாடல் ஆட்சியை சிறப்பாக வழிநடத்தி, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை ஏற்படுத்தி, இந்தியாவிலேயே முதன்மை முதலமைச்சர் என்று அனைவராலும் பாராட்டப்பட்ட எங்களுடைய தலைவர், முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கு என்னுடைய முதல் வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த ஐந்தாண்டுக்கால திராவிட மாடல் ஆட்சியில் துணை முதல்வராக இருந்து, அனைத்து வளர்ச்சிக்கும் முதல்வருக்கு உறுதுணையாக இருந்து, இன்று இந்த அவையில் எங்களை வழிநடத்திக் கொண்டிருக்கின்ற எதிர்க்கட்சித் தலைவர், எதிர்காலத்தில் தமிழ்நாட்டை வழிநடத்திச் செல்லக்கூடியவருமான எங்கள் இளைய தலைவர் அவர்களுக்கு எனது இரண்டாவது வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

25 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் நாகர்கோவில் சட்டமன்ற தொகுதியிலே போட்டியிட எனக்கு வாக்களித்து, மீண்டும் மக்கள் பணி ஆற்றுவதற்கு வாய்ப்பினை வழங்கிய எனது தொகுதி வாக்காளர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அவையிலே பேசுவதற்கான வாய்ப்பினை வழங்கிய தங்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து, ஆளுநர் உரையின்மீது நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது எனது கருத்துக்களைக் தெரிவிக்க விழைகிறேன்.

### நியோ – டைடல் பார்க்!

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் இரண்டு, மூன்று திட்டங்கள், முன்னாள் முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்ட திட்டங்கள், இப்போது களத்திலே தொடங்கப்படாமல் இருக்கின்றது. குறிப்பாக, நாகர்கோவில் பகுதியிலே இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கக் கூடிய வகையிலே 35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு நியோ-டைடல் பார்க் (Neo TIDEL park) அமைப்பதற்காக முன்னாள் முதலமைச்சர் எங்களுடைய தலைவர் அவர்கள் கடந்த பிப்ரவரி மாதம் அடிக்கல் நாட்டி பணியைத் தொடங்கி வைத்தார்கள்.

அதேபோல, நாகர்கோவில் மையப் பகுதியிலே உள்ள பேருந்து நிலையத்தை நவீன பேருந்து நிலையமாக மாற்றுவதற்காக 62 கோடி ரூபாய் மதிப்பீட்டில், அப்பணிக்கான அடிக்கல் நாட்டப்பட்டு, கடந்த பிப்ரவரி மாதம் எங்களுடைய தலைவர் முன்னாள் முதல்வர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. இந்த இரண்டு பணிகளையும் இந்த அரசு உடனடியாகக் களத்திலே தொடங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று அரசின் கவனத்திற்கு கொண்டுவருகின்றேன்.

அதைப்போல, மீனவர் கிராமமாக இருக்கக்கூடிய, இந்தத் தொகுதியிலுள்ள அழிக்கால் பிள்ளைத் தோப்பு மீனவ கிராமங்களிலே, மழைக்காலங்களில் கடல் சீற்றம் ஏற்படுகின்றபொழுது, கடல் நீரும், மழைநீரும் அந்தக் கிராமத்திலுள்ள வீடுகளை சூழ்ந்து தொடர்ந்து ஆண்டுதோறும் நம் மக்கள் பாதிக்கப்படுவதை கடந்த திராவிட மாடல் ஆட்சியிலே முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுசெல்லப்பட்டது.

அப்பகுதியில் தடுப்புச் சுவர் எழுப்புவதற்கும், தூண்டில் வளைவு அமைப்பதற்கும் ஆய்வறிக்கை வழங்குவதற்காக அன்றைக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட்டது. அதற்கான ஆய்வு முடிக்கப்பட்டு, பொதுமக்களிடம் கருத்துக்கேட்பு முடிக்கப்பட்டது. அத்திட்டத்திற்கான மதிப்பீடு 70 கோடி ரூபாயில் தயாரிக்கப்பட்டு, அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. வரக்கூடிய நிதிநிலை அறிக்கையிலே அதற்கான நிதியினை இந்த அரசு ஒதுக்க வேண்டுமென்ற என்னுடைய கோரிக்கையை நான் வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதைப்போல, அருகில் இருக்கக்கூடிய மாவட்டமான தூத்துக்குடி மாவட்டத்தில், திருச்செந்தூர் பகுதியில் அமைந்திருக்கக்கூடிய முருகன் கோயில் அறுபடை வீடுகளில் ஒன்று. தினமும் இலட்சக்கணக்கான பக்தர்கள் அங்கே வருகிறார்கள்.



எனவே, திருச்செந்தூர் நகரப் பகுதிகளில் பல்வேறு உட்கட்டமைப்புகளைப் பக்தர்களின் நலனுக்கான அமைக்க வேண்டுமென்பதற்காக, இன்றைக்கும், அன்றைக்கும் திருச்செந்தூர் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக இருக்கின்ற முன்னாள் அமைச்சர், அனிதா R. ராதாகிருஷ்ணன் அவர்களுடைய கோரிக்கையின்படி, கடந்த ஆட்சி காலத்தில் பல்வேறு திட்டங்கள் வகுக்கப்பட்டு, நடைமுறையிலே இருந்து கொண்டிருக்கிறது.

அந்தப் பணிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு திருச்செந்தூர் நகரப் பகுதியை மேலும் மேம்படுத்தி பக்தர்களுக்கு வசதி செய்து தர வேண்டுமென்று உறுப்பினர் அனிதா R. ராதாகிருஷ்ணன் அவர்களின் சார்பிலே இந்த அரசை நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

### இஸ்லாமிய சமுதாயத்திற்கு தி.மு.க. ஆட்சியில் முக்கியத்துவம்!

இங்கு பேசுகின்றபோது நம்முடைய இஸ்லாமிய சமுதாயத்தைச் சார்ந்த உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்றபோது ஏதோ இஸ்லாமியர்களுக்கு இந்த அரசு வந்த பிறகுதான் பிரதிநிதித்துவத்தை கொடுத்தார்கள் என்பது போல ஒரு மாயத் தோற்றத்தை ஏற்படுத்தினார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே ஏற்கெனவே அந்த அமைச்சரைவையிலெல்லாம் மரியாதைக்குரிய மொகைதீன் கான், மஸ்தான் அவர்கள், நாசர் அவர்கள், உபயதுல்லா என்று பெயர்களை சொல்லிக் கொண்டே போகலாம். பல பேர்களை அமைச்சரைவையிலே வைத்து அழகு பார்த்த அரசு திராவிட மாடல் அரசு என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த அரசு பொறுப்பேற்று 38 நாட்கள் ஆகின்றன. நேற்றைய நிகழ்வைப் பற்றி எங்களுடைய உறுப்பினர் முன்னாள் அமைச்சர் சிவசங்கர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அதற்கு பல விளக்கங்கள் எல்லாம் கொடுக்கப்பட்டது. அவர் எதை குறிப்பிட்டார் என்று சொன்னால் குறிப்பாக இந்த அவை பாரம்பரியமிக்க ஒரு அவை. இந்த அவையிலே காலங்காலமாக ஒரு மரபு கடைபிடிக்கப்பட்டு வருகின்றது. ஒரு நடைமுறை செயல்படுத்தப்பட்டு வருகின்றது. நேற்றையதினத்திலே அந்த மரபு மீறப்பட்டிருக்கின்றது என்பதை தங்களுக்குச் சுட்டிக்காட்டுவதற்காகதான் அதை அவர் சொன்னார் என்பதை நான் தெளிவுப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்கெனவே, இந்த மரபை முறியடிப்பதற்காக முன்னாள் ஆளுநர் பல முயற்சிகளை மேற்கொண்டார்கள். ஆனால், அதிலே அவர் தோற்றுப் போய்விட்டார். காரணம் ஆளுமை மிக்க முதலமைச்சராக முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் இங்கே முதலமைச்சராக அமர்ந்திருந்த காரணத்தால் (மேசையைத் தட்டும் ஒலி) பல முறை அவருடைய முயற்சி தோல்வியடைந்தது.

### அவையின் மரபுகள் தோற்கடிக்கப்பட்டுவிட்டது!

ஆனால், புதிய ஆளுநர் அவர்கள் இன்றைக்கு அவருடைய முதல் முயற்சியிலே வெற்றி பெற்றுவிட்டார் என்று சொன்னால் அதற்கு என்ன காரணம் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். நீங்கள் கவனத்தில் எடுத்துகொள்ள வேண்டும். இன்றைக்கு இந்த அவையினுடைய மரபுகள் தோற்கடிக்கப்பட்டுவிட்டது. ஆளுநர் வெற்றி பெற்றுவிட்டார். அது வருங்காலங்களிலே தொடரக் கூடாது என்பதை சுட்டிக்காட்டுவதற்காகதான் உங்களுக்கு இதை நான் குறிப்பிடு கின்றேனே தவிர வேறு எதுவும் இல்லை.

அந்த விஷயத்திற்குள் நான் அதிகம் போக விரும்பவில்லை. அமைச்சர் அவர்கள், தொடர்ந்து சொன்னதையே தான் சொல்லிக் கொண்டுவருகிறார்.

அமைச்சர் அவர்கள், தொடர்ந்து சொன்னதையே திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கிறார். நான் இந்த அவையைப் பற்றி மட்டும்தான் குறிப்பிட்டேன். அவைக்கு வெளியே நடைபெற்றதைக் குறிப்பிடவில்லை. அவைக்கு வெளியே நடைபெறக்கூடிய நிகழ்வுகளைப் பற்றி நான் குறிப்பிடவில்லை. இந்த அவையில், புதிய ஆளுநருடைய அழுத்தத்திற்கு இந்த அரசாங்கம் பணிந்துவிட்டது என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காகத்தான் இதைச் சொன்னேனே தவிர, வேறொன்றுமில்லை.

இந்த அரசு ஆட்சிப் பொறுப்பேற்று 38 நாட்கள் ஆகின்றன. இந்த 38 நாட்களிலேயே நிர்வாகப் பணிகளில் இந்த அரசு முழுமையாகத் தோல்வியடைந்துள்ளது. மாற்றத்தை எதிர்பார்த்த மக்கள் இன்றைக்கு ஏமாற்றத்தைத்தான் அடைந்துகொண்டிருக்கிறார்கள்.

ஆளுநர் உரை என்பது எதிர்காலத் திட்டங்களுக்கான முன்னோட்டத்தைக் கொடுப்பதுதான். நான், நேற்று இரவு 40 பக்கங்களை உள்ளடக்கிய இந்த ஆளுநர் உரையின் ஒவ்வொரு பக்கத்தையும் திரும்பத் திரும்ப பலமுறையடித்துக் கொண்டேயிருந்தேன். எந்த இடத்திலுமே, அந்தப் பக்கத்தைப் பார்க்கும்போது, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கான, தமிழக மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்கான எந்தவொரு திட்டத்தையும் எதிர்காலத்தில் கொண்டு வருவதற்கான முன்னோட்டத்தையும் இந்த ஆளுநர் உரையில் நான் பார்க்கவில்லை; எந்த அறிவிப்பும் அதில் இல்லை. எனவே, இதை ஒரு வெற்று அறிக்கையாகத்தான் நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கின்றோம். எதுவுமே. இல்லாத ஓர் உரைதான் இந்த ஆளுநர் உரை.

ஆளுநர் உரையின் 3-வது பக்கம், பத்தி 5-ல், பணநாயகத்தை ஒழித்து ஜனநாயகத்தை நிலைநாட்டி, ஆட்சியைப் பிடித்திருக்கிறார் சரித்திர நாயகர் முதலமைச்சர் அவர்கள் என்று குறிப்பிடப்பட்டி ருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இது ஆளுநர் உரையில் நீங்கள் கொடுத்தது. அதேபோன்று, பத்தி 6-ல், பேரறிஞர் அண்ணா அவர்கள், எம்.ஜி.ஆர். அவர்களின் வரிசையில், மாபெரும் சரித்திரப் புரட்சியை தன்னந்தனியாக ஏற்படுத்தி இருக்கிறார் என்று சொல்லப்பட்டுள்ளது.

பேரறிஞர் அண்ணா அவர்களைப் பொறுத்தவரையில், 40 ஆண்டுகளுக்கும் மேலாக பொதுவாழ்வில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு, ஒடுக்கப்பட்ட மக்களுக்காக, சமூக நீதிக்காக பல்வேறு போராட்டங்களை நடத்தி, சிறை சென்று மக்களை நேரடியாகச் சந்தித்து, ஆதிக்க சக்திகளை வீழ்த்தி 1967-ல் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை ஏற்படுத்தியவர்.

அதேபோன்று புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும் 30 ஆண்டுக் காலத்திற்கும் மேலாக பேரறிஞர் பேரறிஞர் அண்ணா அவர்களோடு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களோடு திராவிட முன்னேற்றக் கழகத்தில் பயணித்து, பொதுச் சேவைகளில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு, மக்களை நேரடியாகச் சந்தித்து, அன்றைக்கு அ.தி.மு.க. ஆட்சியை உருவாக்கினார்கள்.

### மக்களிடம் உண்மைக்கு மாறான செய்திகளைப் பரப்பினர்!

ஆனால், social media மூலமாகவும், instagram மூலமாக வும், மக்களிடம் உண்மைக்கு மாறான செய்திகளைப் பரப்பி, மக்களை, ஆட்சியைப் பிடித்தவர்களோடு, பேரறிஞர் அண்ணா அவர்களையும். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வேறொரு சரித்திரப் புரட்சியைச் சிறப்பாகச் செய்திருக்கின்றார்கள். “நான் எங்கே என்று குறிப்பிடவில்லை.

சிறு குழந்தைகள், பெண்கள் பாலியல் வன்கொடுமைக்கு ஆளானாலும் சரி, வானமே இடிந்து விழுந்தாலும் சரி, நான் வாய் திறப்பதே இல்லை என்ற ஒரு மிகப்பெரிய சரித்திரப் புரட்சியை இன்றைக்கு ஏற்படுத்தியிருக்கின்றார். இதைத்தான் நாங்கள் விசில் சிறப்பு.

### தமிழ்நாட்டில் இரு மொழிக் கொள்கை

ஆளுநர் உரையில் 20-வது பக்கம், 27-வது பத்தியில் ஒன்றை குறிப்பிட்டிருக்கின்றீர்கள். அதாவது, இருமொழிக் கொள்கை என்பது தமிழ்நாட்டு மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று என்கிற சூழ்நிலையில், அதனையே இந்த அரசு தொடர்ந்து கடைபிடிக்கும் என்று கூறியிருக்கின்றீர்கள். நாங்கள் வரவேற்கிறோம். அதேநேரத்தில், ஒன்றிய அரசு இன்றைக்கு C.B.S.E. பள்ளிகளில் நடப்புக் கல்வியாண்டிலிருந்து 3-வது மொழியாக சமஸ்கிருதம் அல்லது மாணவ மாணவிகள் விரும்பக்கூடிய ஏதாவது ஒரு மொழியைக் கட்டாயமாக படிக்க வேண்டுமென்று உத்தரவு போட்டு, அது நடைமுறைக்கும் வந்திருக்கின்றது. இதனை எதிர்த்து இந்த அரசு இதுவரை வாயே திறக்கவில்லை. இதுகுறித்து இந்த அரசினுடைய நிலைப்பாடு என்ன என்பதை நான் பேசி முடித்த பிறகு, நீங்கள் உங்களுடைய பதிலுரையில் தெரிவிக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

### 5 கோப்புகளில் கையெழுத்திட்ட திராவிட மாடல் முதலமைச்சர்!

இவற்றையெல்லாம் பார்க்கும் போது, மக்கள் அனைவரும் கேட்கிறார்கள். ‘மாற்றம் கொண்டு வருவோம், மாற்றம் கொண்டு வருவோம்’ என்று கூறினீர்களே! இதுதான் நீங்கள் கொண்டு வந்த மாற்றமா? என்று நாங்கள் கேட்கவில்லை. தமிழ்நாட்டு மக்கள் கேட்கின்றார்கள். 2021 ஆம் ஆண்டு மே மாதம் திராவிட மாடல் அரசு ஆட்சிக்கு வந்தவுடன், எங்களுடைய அன்றைய முதலமைச்சர் அவர்கள், பதவியேற்ற முதல் நாளில் 5 கோப்புகளில் கையெழுத்திட்டார்கள். கொரோனா நிவாரண நிதி 4,000 ரூபாய்; மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து; ஆவின் பால் விலை

குறைப்பு; தனியார் மருத்துவமனைகளில் இலவச கொரோனா சிகிச்சை உள்ளிட்ட 5 கோப்புகளில் அன்றைக்கு கையெழுத்திட்டார்கள். அத்தனையும் அடுத்த நாளே உடனடியாக நடைமுறைக்கு வந்தது.

இப்பொழுது புதிய முதலமைச்சர் அவர்கள், முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் 3 கோப்புகளில் கையெழுத்திட்டார்கள். அந்த 3 கோப்புகளில் உள்ள சரத்துக்கள் என்னவென்றால், முதல் கையெழுத்து, 200 யூனிட் மின்சாரம் 500 யூனிட் மின்சாரம் பயன்படுத்துபவர்களுக்கு இலவசமாகக் கொடுக்கப்படும். அதற்கு மேலும் பயன்படுத்துபவர்களுக்கு அது கிடையாது என்ற ஒரு உத்தரவில் அன்றைக்கு கையெழுத்திட்டிருக்கிறார்கள். அவர்களுடைய தேர்தல் அறிக்கையில் அனைவருக்கும் 200 யூனிட் இலவச மின்சாரம் வழங்கப்படும் என்று அறிவித்தார்கள். அதிலும், முதல் வாக்குறுதியிலேயே முதல் கையெழுத்திலேயே மக்கள் ஏமாற்றப்பட்டு விட்டார்கள். இரண்டாவது, போதைப் பொருளைத் தடுப்பதற்காக, ‘போதைப் பொருள் தடுப்புப் படை ஒன்றைத் தொடங்குவோம்’ என்று கூறினார்கள். இன்றுவரை அதை தொடங்கியதாகத் தெரியவில்லை. ஏற்கெனவே எல்லா மாவட்டங்களிலும் காவலர்களைக் கொண்டு மதுவிலக்கு தடுப்புப் பிரிவு ஒன்று செயல்பட்டு வருகின்றது. அவர் புதிதாக எவ்வாறு தொடங்குகின்றார் என்று தெரியவில்லை. இதுவரையிலும் அவர் தொடங்கவில்லை. அதிலும் அவர் தோல்வி.

மூன்றாவது, ‘சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை’ என்று ஒரு திட்டத்தை அறிவித்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இத்திட்டத்தை தொடங்கி வைத்திருக்கின்றார்கள். தமிழ்நாட்டில் ஏற்கெனவே, CAWC-Crime Against Women and Children என்கிற ஓர் அமைப்பு கிட்டத்தட்ட 5,300 காவலர்களுடன் இயங்கி வருகின்றன. அதில் 1,635 சிறார் நலன் காவல் துறையினர் பணிபுரிகின்றார்கள். மேலும், 7 பெண்களுக்கு எதிரான விசாரணைப் பிரிவுகள் இருக்கின்றன. 43 குழந்தைகள் தடுப்புப் பிரிவுகள் இருக்கின்றன.39 சிறப்பு சிறார் காவல் பிரிவுகள் இருக்கின்றன. கிட்டத்தட்ட அனைத்து மகளிர் காவல் நிலையங்கள். அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் இருக்கின்றன. பெண்களை மேலும் பாதுகாத்திடக் கருதி pink patrol என்ற திட்டமும் நடைமுறையில் இருக்கின்றது.

ஆனால், இன்றைக்கு ‘சிங்கப்பெண் அதிரடிப்படை’ என்ற ஒன்றை நீங்கள் தொடங்கியிருக்கிறீர்கள். அதில் பணிபுரியக்கூடிய காவலர்கள் யார் என்று சொன்னால், traffic பிரிவில் Armed Force, Reserve Force பிரிவில் இருக்கக் கூடிய காவலர்களை பகுதிநேர பணியாளர்களாகத்தான் நீங்கள் பணியமர்த்தியிருக்கின்றீர்கள். ஒரு காவலர் ஒரு shift-ல் காவலர் சீருடையில் பணிபுரிகிறார்கள். இரண்டாவது shift-ல் சிங்கப் பெண் சீருடையில் பணிபுரிகிறார்கள். இதில் மக்களுக்கு எவ்வளவு பெரிய ஏமாற்றம் கிடைத்திருக்கிறது என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். அதேபோல் சிங்கப்பெண் படைக்கு body camera பயன்படுத்தபடுகிறது என்ற ஓர் அறிவிப்பையும் அன்றைக்குக் கொடுத்தார்கள். ஆனால், body camera வாங்கியதாக, கொள்முதல் செய்ததாக எந்தவித அறிவிப்பும் அரசிடமிருந்து வரவில்லை. அந்த function-ஐ inaugurate செய்த நாள் மட்டும் போக்குவரத்து காவல் துறையினரிடமிருந்து கடன் வாங்குவதுபோல், போக்குவரத்து காவல் துறை யினரிடமிருந்து இரவலாக ஒரு நாளைக்கு body camera-வைப் பெற்று இவர்களிடத்தில் பொருத்தி வைத்துவிட்டு, function-ஐ அன்றைக்கு முடித்திருக்கிறார்கள். இதைத்தான் மக்கள் கேட்கிறார்கள். ‘நீங்கள் கொண்டு வந்திருப்பது மாற்றமா, எங்களுக்கான ஏமாற்றமா` என்று. இது மாற்றம் இல்லை என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். அதேபோல, திராவிட மாடல் ஆட்சி இருந்தவரை தமிழ்நாட்டில் - சட்டம்-ஒழுங்கு சிறப்பாக பேணிப் பாதுகாக்கப்பட்டது.

ஆனால், த.வெ.க. ஆட்சி அமைந்த ஒரே மாதத்தில், தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு அடியோடு சிதைந்து போய் இருக்கின்றது என்பதை இன்றைக்கு மக்கள் உணர்ந்திருக்கின்றார்கள். இன்றைக்கு குற்றவாளிகள் முழு சுதந்திரத்தோடு குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

ஒரு மாதத்தில் மட்டும் சுமார் 175 பாலியல் வன்கொடுமைகள், 65 கொலைகள், 4 சாதிய ஆணவப் படுகொலைகள் நடந்துள்ளன. இந்த நிலை இப்படியே தொடர்ந்தால், இந்தியாவிலேயே அமைதியான மாநிலம் தமிழ்நாடுதான் என்று இருந்த நிலை மாறி, இந்தியாவிலேயே ஆபத்தான மாநிலம் தமிழ்நாடுதான் என்ற நிலை வந்துவிடுமோ என்ற அச்சம் இன்றைக்கு மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கிறது.

அரசினுடைய அமைச்சர் அவர்கள் அன்றாட நடவடிக்கைகளைப் பற்றி சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இது எல்லா அரசும் செய்யக்கூடியதுதான். நான் குறிப்பிட்டதை அவர்கள் சரியாக - இல்லை இல்லை நான் குறிப்பிட்டு சொன்னதற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள்.

சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை திட்டத்தைப் பற்றி சொல்லவில்லை, போதைப் பொருட்கள் தடுப்புப் படை இன்னும் அமைக்கப்படவில்லை என்றுதான் சொன்னேன். அதற்கு நடவடிக்கை எடுத்ததைப் பற்றி சொன்னார்கள். நான் ஒப்புக்கொள்கிறேன். அது எல்லா அரசாங்கத்திலும் எடுக்கக்கூடிய நடவடிக்கை. அந்தந்த மாவட்டங்களில் இருக்கின்றன. தடுப்பு பிரிவு இருக்கிறது. மதுவிலக்குத் தடுப்பு பிரிவு இருக்கிறது. அதன் மூலமாக நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். நான் சொல்ல வந்தது புதிய படை உருவாக்கினோம் என்ற சொன்னீர்களே, எத்தனை நபர்களை வைத்து உருவாக்கியிருக்கிறீர்கள், என்றைக்கு அது தொடங்கப்பட்டது என்பதைத்தான் கேட்டேனே தவிர வேறு ஒன்றும் இல்லை.

சட்டம்-ஒழுங்கை பற்றி நான் ஒன்றே ஒன்றை மட்டும் சொல்லி நிறைவு செய்கிறேன். கிட்டத்தட்ட திராவிட மாடல் ஆட்சியில் 42 சதவிகிதம் பெண்கள் பணிக்குச் செல்லக்கூடிய வகையில், பாதுகாப்பான ஓர் ஆட்சியாக அந்த ஆட்சி இருந்தது. ஆனால், இன்றைக்கு பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் நடந்துகொண்டிருப்பது எதிரான பாலியல் வன்கொடுமைகள் நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது.

இவ்வாறு எஸ்.ஆஸ்டின் பேசினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## எல். பலராமன்

### ஜூன் 21 (2020)



தனது இளம் வயதிலேயே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு கழகப் பணியாற்றியவர்

வடசென்னை மாவட்டத்தில் வட்டச் செயலாளர், பகுதிச் செயலாளர் என படிப்படியாக உயர்ந்து மாவட்டச் செயலாளராக பொறுப்பு வகித்து கழகம் ஆட்சியில் இருந்தபோதும் – எதிர்க்கட்சியாக இருந்தபோதும், வடசென்னையில் கழகம் வளர பாடுபட்டவர். வடசென்னையில் முத்தமிழறிஞர் கலைஞர், கழகத் தலைவர் ஆகியோர்களை கொண்டு பல பொதுக்கூட்டங்களை எழுச்சியுடன் சிறப்பாக நடத்திக் காட்டியவர்.

கழக தணிக்கைக்குழு உறுப்பினராக பணியாற்றியதுடன், மத்திய கூட்டுறவு வங்கித் தலைவராக பணியாற்றியவர்.

“இவர் பலராமன் அல்ல; ‘பலே ராமன்’ என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

கழகம் அறிவித்த போராட்டங்கள் – ஆர்ப்பாட்டங்களையும் முன்னெடுத்து நடத்திக் காட்டியதோடு, அதில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

“கழகப் பணிகள் அனைத்தையும் அமைதியாக, அவர் என்ன மாதிரிப் பணியாற்றுகிறார் என்றே தெரியாத அளவுக்கு அடக்கமாக ஆற்றுவதோடு, அவை அனைத்தையும் நடத்தி முடிப்பார்.” என கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**